

**மனிதன் பதில்கள்**

**தினமணிக் கதிர் 2/6/1996**

தன்மானம், சூடுசொரணை எங்கே கிடைக்கும்?

என்.ஆர். ரவி , திருவெண்காடு.

**வெளியே தேடினால் கிடைக்காது. நமக்குள்ளேயே தோண்டி எடுக்க வேண்டும்.**

அன்பழகன் - நெடுஞ்செழியன் ஒப்பிடுக?

தாஜ்மகால் இஸ்மாயில் , சின்னசேலம்.

**மரியாதைக்குரிய இரண்டாவது இடத்தையும் மரியாதை இழந்து பெற்ற இரண்டாவது இடத்தையும் எப்படி ஒப்பிட முடியும்?**

தமிழ் வார இதழ்களில் வெளியாகும் கேள்வி - பதில் பகுதியில் மனி தன் விரும்பிப் படிப்பது எதை?

ஏ.ஜி. கல்யாணசுந்தரம் , மணியக்காரன்பாளையம்.

**மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எல்லாவற்றையும் படித்தாக வேண்டியிருக்கிறது. மணியக்காரன்பாளையம் ஏ.ஜி. கல்யாண சுந்தரம் இதே கேள்வியை இன்னும் யாருக்கெல்லாம் அனுப்பியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள, அல்லி பதில்கள் ஜொள்ளு மதன் பதில்கள் பயோடேட்டா, அரசு பதில்கள் காலமாகிவிட்டன. தராசின் முள் கூர்மையானது. பாக்யாவில் சிறுகதைகள் குறைவு என்ற பஞ்சத்தை , கே - ப தீர்க்கிறது. ஜூனியர் பதில்களில் சமயத்தில் ஆச்சரியமான கறார்! ஆனால் மனிதனுக்குப் பயனுள்ள பதில்களாகக் கிடைப்பது கணையாழியில் சுந்தர ராமசாமியின் பகுதியில்தான்.**

லஞ்சம் வாங்குபவர்களை கத்தியால் குத்தச் சொல்கிறார் 'இந்தியன்'. மனிதன் என்ன சொல்கிறார்?

சங்கர்குமார்,அருகாவூர்.

**கத்தியைத் தீட்டாதே, உந்தன் புத்தியைத் தீட்டு.**

அரசியல்வாதிகளை ஓயாமல் விமர்சிக்கிற பத்திரிகையாளர்கள் எல்லாரும் யோக்கியர்களா?

ஜி. சுகுணா,வேடசந்தூர்.

**இல்லை. எல்லா துறைகளிலும் நல்லவர்கள் பொல்லாதவர்கள் உள்ளது போல இதிலும் உண்டு. சின்னச் சின்னத் தவறுகள் செய்கிறவர்களும் உண்டு. காலை முதல் இரவு வரை ஆட்சியாளர்கள் காலை சுற்றி வந்து மெடிகல் காலேஜ் சீட் மாதிரிப் பெரிய சலுகைகளுக்காக உழைக்கும் பத்திரிகையாளர்களும் உண்டு. ஆறுதலான விஷயம் இப்படிப்பட்டவர்கள் எண்ணிக்கை இன்னும் பல்கிப் பெருகிவிடவில்லை.**

மனிதனுக்குப் பிடித்த மதம் எது?

எஸ். கணேசன் , வேலூர் - 1

**மனிதம்.**

பிறந்த நாள் விழாவை கருணாநிதி ரத்து செய்துவிட்டாரே! இது கதிர் வம்பனின் வெற்றிதானே?

ஆர். குமரேசன், எண்ணூர்.

**வம்பன் கேட்டபடி ஸ்டாலினை அமைச்சராக்கவில்லை என்பதால் அது வம்பனுக்குத் தோல்வியா? கருணாநிதி தனக்குச் சரி என்று படுவதைச் செய்கிறார். வம்பன் தனக்குச் சரி என்று பட்டதைச் சொல்கிறார். சமயங்களில் அவை ஒத்துப் போகலாம். இதில் வெற்றி தோல்விகளுக்கு இடமில்லை. தவிர,**

**நாம் சொன்னபடி மற்றவர்கள் கேட்கிறார்கள் என்று நினைக்கிற பத்திரிகையாளர்கள் அனுபவ முதிர்ச்சியில்லாதவர்கள். உண்மையில் தன் தொண்டர்கள் எவ்வளவு வருத்தமடைந்தாலும் பரவாயில்லை என்று விழாக்களுக்கு - கருணாநிதி தடைவிதித்தது அவருடைய அண்மைக்கால அரசியல் அணுகுமுறைக்கு இன்னொரு வெற்றி.**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எஸ். செல்வரங்கம் ,மேல்சீசமங்கலம்.

**அடிப்படைகள் சரியாக இருந்தாலும், பலவற்றை மாற்றி எழுத வேண்டிய காலம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன், சீக்கிரமா கச் செய்வது நாட்டுக்கு நல்லது.**

பத்திரிகையாளர் சோ, அரசியல் ஆய்வாளர் சோ, நடிகர் சோ - இவற்றுள் உம்மைக் கவர்ந்தவர் யார்?

கே, அவினாசியப்பன் , ஆலூர்.

**நடிகர் சோ ஒரு கோமாளி. அவர் தமிழ்த் திரைப்பட உலகில் எதையும் சாதிக்கவில்லை. பல மோசமான படங்களில் கூட நடித்திருக்கிறார். அவரே மறக்க நினைக்கும் அந்தக் கோமாளியை விட்டுவிடலாம். அரசியல் ஆய்வாளர் சோ, சமயத்தில் அரசியல் தரகராகவும் ஆகிவிடுவதால், எது ஆய்வு, எது வக்காலத்து. எது பிரசாரம் என்று குழப்பமாகிவிடுகிறது. பத்திரிகையாளர் சோ தான் மனிதனைக் கவர்ந்தவர். அவர் கருத்தோடு உடன்பாடு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் எழுதுகிற தொனி, ஆணித்தரமாக ஓங்கியறைந்து சொல்லும் விதம் சுவையானது.**

சிரிக்கும் பெண்ணை நம்பலாமா?

இரா. பிரபாகரன், நெய்தவாசல்.

**சிரிப்பில் ஆணென்ன பெண்ணென்ன? சிரிப்பைப் பொறுத்துத்தான் நம்பிக்கை. புன்சிரிப்பா? சரி. அசட்டுச்சிரிப்பா? ஒதுங்கிவிடலாம். கண்கள் சிரிக்காமல் உதடு மட்டும் விரிகிறதா? ஆளையே தவிர்த்துவிடுங்கள். சிரிக்காமலே இருந்தால்? நரசிம்மராவை நினைத்துப் பாருங்கள். நம்பிக்கை வைக்க முடியுமா? ம்ஹூம்.**

பள்ளித் தேர்வில் தோல்வி அடைந்தால் தற்கொலை செய்து கொள்ளுகிறார்களே ஏன்?

மா. திருப்பதி ,மாங்குட்டைப்பாளையம்.

**மனிதனை வேதனைப்படுத்தும் விஷயங்களில் ஒன்று இந்த மாணவர்களின் தற்கொலை. இதற்கு நாம் எல்லாரும் பொறுப்பு. நம் இளைஞர்களை, சிறு வயதிலிருந்தே தேர்வில் அதிக மதிப்பெண் வாங்கும் சக்தியுள்ள யந்திரங்களாக மாற்றுவதில் வெறியோடு வேலை செய்து வருகிறோம். எல்.கே.ஜி.யில் பதி னாறு பாடங்கள், டெஸ்ட்டுகள், எக்சாம்கள்," ரேங்க் கார்டுகள் என்று தொடங்கும் இந்தச் சித்ரவதை, ப்ளஸ் டூ முடிக்கும் சமயத்தில் டாக்டர், எஞ்ஜினியர் என்ற பேராசைக் கனவுகளுக்காக மேலும் மேலும் கொடுமையானதாக மாறுகிறது. நல்ல இசையை, நல்ல ஓவியத்தை, இயற்கை எழிலை, சிறந்த புத்தகத்தை, ரசிக் கக் கற்றுக் கொடுக்கும் வேலை யைப் பெரும்பாலான பெற்றோர்கள் செய்வதில்லை. பெரிய வேலை, பெரிய சம்பளம் என்ற ஒரே லட்சியத்தோடு கடும் போட்டி மனப்பான்மையோடு பிள்ளைகளை வளர்த்து அவர்களை ஆன்மா அற்றவர்களாக ஆக்கிவிட்டு, முதுமையில் அநாதை இல்லங்களைத் தேடுகிறோம். இந்தப் போட்டி மனப்பான்மைதான் தோல்வியை சந்திக்க சக்தியற்றுத் தற்கொலையில் சென்று சேர்க்கிறது. ஐந்திலேயே இதை மாற்றி வளைக்க வேண்டிய அவசியம் - அவசரம் இருக்கிறது.**

தற்காலத்தில் மிகவும் தேவையா னது தனிமனித ஒழுக்கமா? சமுதாய ஒழுக்கமா?

புலவர்கான. கனேசன் , பொறையாறு.

**இரண்டையும் பிரிக்கலாகாது. சமுதாய ஒழுக்கம் குன்றிய சமூகத்தில் தனிமனிதனுக்குத் தன் ஒழுக்கத்தைக் காப்பதே கடினமாகிவிடும்; தன் ஒழுக்கம்**

**பற்றி மட்டும் கவலைப்படும் மனிதனால், சமுதாய ஒழுக்கம் மேம்பட்டு விடாது. ஒன்று மற்றதை எப்போதும் சார்ந்தே இருக்கிறது.**

**மனிதனின் மறுபக்கத்தைக் கூறு?**

**கே, கணேஷ்குமார், காயாமொழி.**

கவிதை; கதை; பெரும்பாலும்.

ஆஸ்கரை வெல்லத் துடிக்கும் கமல், தமிழக முதலமைச்சர் நாற்காலியைப் பிடிக்க நினைக்கும் ரஜினி இவர்களைப் பற்றி?

எஸ், முருகானந்தம், கீழக்கரை.

**நாற்காலி ஆசை ரஜினிக்கு இருப்பதாக இதுவரை தெரியவில்லை. ரஜினியைப் பயன்படுத்தி நாற்காலியைப் பிடிக்கிற ஆசை சில காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிறது. கமலின் துடிப்பு வெற்றி பெற்றால் தமிழ் - சினிமாவுக்குப் பெருமைதானே?**

தேவகௌட தாக்குப் பிடிப்பாரா?

வி.ராகவன், சென்னை -4

**சந்தேகம்தான். ஆனால் நரசிம்மராவ் மாதிரி எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ நமது ஜனநாயகம் தாக்குப் பிடிக்க வேண்டுமானால் தேர்தல் முறையை சீக்கிரமாக மாற்றியமைக்க வேண்டும்.**

**பரிசு பெறும் கேள்வி**